செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி ீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ௵ மாசி ீ ௨0உ வெள்ளிக்கிழமை (3 3-1972) [இலக்கம்

# மக்கள் இன்பமாக வாழ வழிவகுத்த நூல் திருக்குறள்

## வள்ளுவர் உய்த்துணர வைத்த வீட்டு நெறியை வெளிப்படையாகக் கூறுவது திருவருட்பயன்

"திருவள்ளுவ நாயனர் மக்கள் இன்பமாக வாழ வழி வகுத்தார். அவர் அருளிச் செய்த திருக்குறளைப் போன்ற நூல் வேறெந்த மொழியிலுமில்லை. திருக்குறள் உலகில் ஏறத்தாள 90 மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்றிருக்கின்றது. அவர் விரிந்த கருத்துக்களைச் சுருக்கமாக ஈரடி வெண்பாவில் விளக்கியுள்ளனர், கல்வியின் பயன் இறைவனடியை வணங்குதலேயெனக் கூறியுள்ளனர். புலால் மறுத்தல் என்னும் அதிகாரம் மக்கள் அஹிம்சை மூலம் முத்தி பெற முடியுமென்பதைக் காட்டுகின்றது. இக்காலம் மக்கள் பலர் திருவள்ளுவநாயனருடைய அரிய உபதேசத்தை மறந்து விட்டார்கள். உமாபதிசிவாசாரியார் திருவாய் மலர்ந்த "திருவருட்பயன்" என்னும் சைவ சித்தாந்தநூல் திருவள்ளுவநாயனர் ஊகித்தறிய வைத்த வீட்டுநெறியை வெளிப்படையாக விளக்குகின்றது".

என்றிவ்வாறு சென்ற புதன்கிழமை (1-3-72) மாலை சைவபரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவள்ளுவ நாயனார் குருபூசைக் கொண்டாட்டத்தில் மாலை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தியபோது ஷ சபைத் தலைவர் நியாயவாதி திரு. த. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்று காலையில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் நடராசா பூசை, திருவள்ளுவ மாலை ஓதல், மாகேசுர பூசை ஆதியன நடைபெற்றன.

"கடவுள் ஒருவர் உண்டு. அக்கடவுள் உலகுக்கு முதலாயுள்ளவர். இந்த உண்மையை விளக்கவே திருவள்ளுவர் 'அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு' எனத் தமது நூலை மங்கலமாயாரம்பித்தனர். இக்குறள் அகர வுகர மகர"

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

உ
திருச்சிற்றம்பலம்

தூயானைச் சுடர்ப்பவளச்
சோதியானைத்
தோன்றிய வெவ்வுயிர்க்குந்
துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற்
கீந்தான் றன்னைச்
சங்கரனைச் சந்தோக
சாம மோதும்
வாயானை மந்திரிப்பார்
மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும்
வழுத்துவார்க்குச்
சேயானைத் திருவீழி
மிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே
சேர்கின் றாரே.

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசுசுவாமிகள்

## சைவமகாநாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இவ்வருடச் சைவ மகாநாட்டை 28, 29, 30—4—72 ஆம் நாட்களில் நடாத்தத் தீர்மானித்துள்ளது. செஞ்சொற் கொண்டல் வித்துவான் சொ. சிங்காரவேலன் M. A. Dip-Lit-Ph. D. (தமிழ் விரிவுரையாளர், அ. வ. கல்லூரி) அவர்கள் தலைமை வகித்துத் தருவருள்பாலித்துள்ளது.

ஈழத்து அறிஞர்களும் சைவமகாநாட்டில் உரை நிகழ்த்தி அதனைச் சிறப்பிப்பார்கள்.

## திருக்குறள் THE GREAT KURAL

### பொருட்பால்

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச சூரசங்காரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள திருக்குறள் உரைத்தோகை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

திருவள்ளுவர் அறிவுரைகள் எக் காலத்திற்கும் பொருத்தமானவை; இக்காலத்தில்கூட அரசியல் முதலிய பொதுக் காரியங்களில் ஈடுபடுபவர்களும் பிறரும் கைப்பிடிக்கவேண்டிய உயர்ந்த கருத்துக்கள் திருக்குறளில் அடங்கியுள்ளன என்பதை உரையாசிரியருடைய விளக்கங்கள் தெளிவாக்கியுள. — ஆசிரியர்

அதிகாரம் 85 புல்லறிவாண்மை - Conceitad Folly
குறள் 841 (முற்றொடர்— 10)

அறிவின்மை யின்மை யின்மையு பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

1. ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமையாவது நல்லறிவில்லாமையே. ஏனைப் பொருளில்லாமையை உலகத்தார் இல்லாமையாகக் கொள்ளமாட்டார்.

1. The want of Knowledge is the greater of all wants. The world will not regard as such the want in respect of wealth.

2. வறுமையுள் கொடிய வறுமையாவது அறிவில்லாமையாகும். பிற வறுமைகளை உலகம் பெரிய குறையாகக் கருதாது.

2. The sorest of all kinds of poverty is the poverty of Knowledge: The poverty in respect of othea things is not regarded by the world as a great want.

3. தரித்திரத்திலும் தரித்திரம் அறிவில்லாமையே. பிற தரித்திரங்களை உலகம் குற்றமாக இகழ்வதில்லை.

3. The want of Knowledge is the greatest of all wants; but that of other things is not so held in contempt by the world.

புல்லறிவாளர் செல்வமெய்திய வழியும் இம்மை மறுமைப் பயன் எய்தாமையின் அதனை இன்மையுள் இன்மை என்றும். நல்லறிவாளர் வறுமை எய்திய வழியும் அஃது இழவாமையின் அதனை இன்மையாவையாது என்றுங் கூறினர் என்று விளக்கும் பரிமேலழகர் உரையைத் தழுவியது முதலாவது உரை. பொருளின்மையை இன்மையாகக் கருதாததற்குக் காரணமாக அது புண்ணியம் செய்தார் மாட்டே சேரும் என்று மணக்குடவரும், பொருளிமடி ஒரு தருவாயில் வரும், ஒரு தருவாயில் போம் என்று பரிதியாரும் விளக்குவர். வையாது என்பதற்கு வைதல் செய்யாது என்று மூன்றாவது உரையில் பொருள் காணப்பட்டுள்ளது. பிறிதின்மை என்பது பொருள் மாத்திரமன்றி இடம், ஏவல் முதலியவற்றையும் உள்ளடக்குவது என்பாரும் உளர். புல்லறிவாண்மை: புல்லிய அறிவை ஆளுந்தன்மை; அதாவது தான் சிற்றறிவினனாக இருந்தும் செருக்குக் காரணமாகத் தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல் கொள்ளாமை. பொருள் முதலியன படைத்தும் அதனை நற்பயன் தரும் வழியில் உபயோகிக்கத் தூண்டுவது அறிவு. அஃதில்லாமை இன்மையுள் இன்மையாயிற்று. ஏழையாய் இருந்தாலும் அறிவு உள்ளாயின் பெற்றது கொண்டு நல்வழியில் வாழ முடியுமாதலின் பிறதன்மை இன்மையாய் வையாதுலகு.

(வளரும்)

## வில்லூன்றி இந்து மயானம்

### சைவப் பண்பாட்டிற்கமைய நவீனமுறும்.

#### தர்மகர்த்தா சபை நிர்வாகத்தைக் கவனிக்கும்

வில்லூன்றி இந்து மயானத்தின் நிர்வாகத்தை வில்லூன்றி தேவஸ்தான தர்மகர்த்தாவும், சைவவிருத்தச் சங்கத்தினரும் தர்மகர்த்தாக்கள் சபையொன்றிடம் கடந்த மாசி மகத் தினத்தன்று ஒப்படைத்தனர். தர்மகர்த்தா சபை ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்டது. சைவவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வே. கோபால பிள்ளை, காரியதரிசி திரு. நா. கிருஷ்ணசாமி யாழ். சைவபரிபாலன சபைத் தலைவர் நியாயவாதி திரு த. சோமசுந்தரம், சபைச் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம், வில்லூன்றி தேவஸ்தான தர்மகர்த்தா திரு சி சமரவடிவேல, வேலணை கிராம சபைத் தலைவர் திரு க. சதாசிவம், வண்ணார்பண்ணை திரு. ஆ. நல்லதம்பி, திரு. V. சபாபதிப்பிள்ளை, (நல்லை ஆதீனம்) கு. செல்லையா ஆகிய ஒன்பதினர் இத்தர்மகர்த்தா சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

தர்மகர்த்தா சபையின் முதலாவது கூட்டம் மாசி மகத்தன்று வில்லூன்றியில் நடைபெற்றது. திரு. க. சதாசிவம் அவர்கள் தலைவராகவும், திரு. நல்லதம்பியவர்கள் செயலாளராகவும்; திரு. வே. கோபாலபிள்ளையவர்கள் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். சைவப் பண்பாட்டிற்கமைய மயானத்தைத் திருத்துவது என்ற தீர்மானமுட்படப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 17-3-72 முதல் மயானம் மேற்படி சபையினால் நிர்வகிக்கப்படும்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞு மாசி மீ கக-உ வெள்ளிக்கிழமை [1972]

## மனக்கவலை தீர்க்கும் மருந்து

மக்கள் தங்கள் மனக்கவலையைத் தீர்ப்பதற்குப் பல உபாயங்களைக் கையாளுகின்றார்கள். திருவள்ளுவ நாயனுர் திருவாய் மலர்ந்தருளிய வழியை அவர்கள் கடைப்பிடிப்பார்களாயின் அவர்களுடைய மனக்கவலை சுலபமாக நீங்கும்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

பெருமைக்கும் பேரருட்கும் ஒப்பில்லாத பெருமானுடைய திருவடியைச் சேர்தலே மனக்கவலையைத் தீர்த்தற்கு உரிய வழியாகும். இக்காலம் உலகில் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள். பெரிய அரசுகள் வலிமையும் பெருமையும் அடைவதற்காக ஒன்றோடொன்று விசுவாசமற்று அச்சத்துடன் இயங்குவதைக் காண்கின்றோம். ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் அன்பு வழியைக் கடைப்பிடிக்காமல் பகைமையுடன் வாழ்கின்றார்கள். நமது நாட்டில் மக்கள் பொருளாதார நெருக்கடி, அரசியலுரிமைகளைப் பெறுவதில் அடையும் கஷ்டம், ஒழுக்கக் குறைவு, களவு இனப்பூசல் முதலிய துன்பங்களினால் மனநிறைவற்று வாழ்கின்றார்கள்.

திருவள்ளுவ நாயனுர் அறிவுரையை மக்கள் கடைப்பிடித்தால் மனக்கவலை நீங்கும். கடும் வெயிலில் தண்ணீர் விடாயினால் வருந்துகின்ற ஒருவன் சுத்த நீருள்ள வெள்ளத்தில் நின்று வருந்துகின்றான். விடாயைத் தணிக்கக் கூடிய சுத்த நீர் தன்னைச் சூழ்ந்திருப்பதை அவனறியவில்லை. அவன் அங்ஙனம் வருந்துவதற்கு அவனுடைய அறியாமையே காரணம். தன்னைச் சூழ்ந்துள்ள சுத்த நீரை உட்கொண்டால் தனது விடாய் நீங்குமென்பதை அவன் உணர்வானுயில் அவனுடைய விடாய் தணியும்.

மக்கள் தங்கள் மனக்கவலையை நீக்குவதற்குப் பிறருடைய உதவி தேவையில்லை. அங்ஙனங்களுதபடி எங்கும் பிரகாசமாகிய பெருமான் மறைவாய் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நிறைந்திருக்கின்றான். அவருடைய திருவடிகளை பக்தியோடு ஒருவன் வழிபடுவானுயில் அவனுடைய மனக்கவலை நீங்கிவிடும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மக்களுடைய இன்னல்கள் நீங்கவே,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தாகவே.

என்றருளிச் செய்தனர். அரனாமம் வையகமெல்லாஞ் சூழ்ந்திருக்குமாயின் தீயதெல்லாம் நீங்கும். உலகத்தில் துயர் தீரும். திருஞானசம்பந்தப் பெருமானுடைய உபதேசம் திருவள்ளுவ நாயனுருடைய உபதேசத்தை வலியுறுத்துகின்றது.

நாங்கள் எல்லோரும் இன்புற்றிருக்க திருவள்ளுவ நாயனுருடைய அறவுரை பேருதவி புரியுமல்லவா? திருவள்ளுவ நாயனார் தமிழன்னை மணிமகுடமாக அணிந்துகொள்ள உதவிய திருக்குறளின் உபதேசம் இன்னல்கள் சூழ்ந்த நெருக்கடி காலத்தில் தமிழ்மக்களைப் பாதுகாக்கும்.

—:—

## வவனியா இந்து இளைஞர் சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் காஞ்சிபுரம் தொண்டைமண்டலம் மெய்கண்டார் சந்தானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் சிறந்த சைவக் கருத்துக்கள் பொதிந்துள்ள சொற்பொழிவாற்றினுர். சிவாயநம' என்ற திருவைந்தெழுத்தின் தத்துவத்துக்கு இலகுவான முறையில் விளக்கம் கூறினுர்: வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம் தலைமை வகித்தனர். திரு. குழந்தைவேல் திரு க. நல்லதம்பி திரு. கே. லோகசிங்கம் ஆகியோர் குறிப்புரைகூறினர்,

## மக்கள் இன்பமாக வாழவழி

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

மாகிய ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் வியட்டி எழுத்துக்களை அடக்கியுள்ளது. திருவள்ளுவருடைய சமயம் விவாதத்திற்குரியதாகவுள்ளது சிலர் அவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்றும் சிலர் அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் என்றும் பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர் உமாபதிச் சிவாசாரியர் தமது 'திருவருட்பயன்' என்னும் நூலில் "அகர உயிர்போல் அறிவாகி எங்கும், நிகரிலிறை நிற்கும் நிறைந்து" என்ற திருவள்ளுவர் காட்டிய உவமையையே எடுத்தாண்டு உலகுக்கு இறைவன் முதலாயிருக்கின்றாரெனக் காட்டியமையினாலும் திருவள்ளுவர் இல்லறத்தின் பெருமையை விளக்கிய முறையினாலும் இவைபோன்ற கருத்துக்களாலும் அவர் சைவ சமயத்தவர் என்பது விளங்கும்' என வித்துவான் க. சொக்கலிங்கம் B. A. அவர்கள் "வள்ளுவரும் சமயமும்" என்ற பொருள்பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார் சைவப் பெரியார் திரு. மு. சதாசிவம் அவர்கள் "திருவள்ளுவர் ஒரு ஞானி" என்னும் பொருள்பற்றிப் பேசினுர்.

மகாவிஷ்ணு ஒரு வாமனவடிவத்துடன் மகாவலிச் சர்க்கரவர்த்தியையடைந்து மூன்று அடி மண் உதவும்படி கேட்டனர். உடனே அவர் ஒரு நெடிய வடிவத்தையெடுத்து ஓரடியாலே பூமியையளந்தார். இரண்டாமடியால் தேவலோகத்தையளந்தார், மூன்றாம் அடிக்கு மண் இல்லாமையினால் அதனை மகாவலியினுடைய சிரசிலே வைத்தார் என்ற ஒரு புராணக்கதையுண்டு. திருவள்ளுவ நாயனுர் திருமாலைப் போல இரண்டடிகொண்ட குறள் வெண்பாவினால் உலக முழுவதையும் அளந்துவிட்டார், அவர் கூறாத உண்மைகளில்லை. அவருடைய நூலின் நோக்கம் முத்திப் பேறே.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

மூட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து என உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை விளக்குகின்றனர். உடம்புவேறு, உயிர்வேறு, பதி பசு, பாசம் என முப்பொருளுண்மையைத் தமது நூலில் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழிந்துச்
சார்தரா சார்தரு நோய்

ஒருவன் எல்லாப் பொருட்குஞ் சார்பாகிய அச் செம்பொருளையுணர்ந்து இருவகைப்பற்றும் மற ஒழுகுவானுயின் அவனை முன்சார்க் கடவனவாய் நின்ற துன்பங்கள் அவனைச் சாரமாட்டா. செம்பொருளைச் சார்தலே உயிர்சார்பாக வேண்டும். அங்ஙனம் வாழும்பொழுது செம்மலர்நோன்றாளைச் சேரவொட்டாத மும்மலங்களும் நீங்கும். உயிர் இறைவனடியைச் சேரும்.

போதனுசிரியர் திரு. நா. செல்லப்பா அவர்கள 'திருவள்ளுவரும்மெய்யுணர்தலும்' என்னும்பொருளில பேசும்பொழுது, மெய்யுணர்தலுக்கு நான்கு வழிகள் கேட்டல, சிந்தித்தல், தெளிதல, நிட்டை கூடுதலாகும். ஆகமம் அநுமானம் உபயோகப் படுகின்றன. ஆகமம் இறைவாக்கு, அநுமானம் தர்க்கித்து நிச்சயித்தல, மெய்ப் பொருள சத்து. ஆன்மா சத்தைச் சேர்வதே மெய்ஞ்ஞானமாகும். ஐன்ஸ்டீன் என்ற தத்துவ ஞானி பூரணப் பொருளாகிய மெய்ப்பொருளின் துணையுடனேயே மெய்யறிவைப்பெறமுடியுமென்றும் மனிதன சிற்றறிவுடையவனென்றும். பூரணப பொருளாகிய இறைவனுடைய சம்பந்தமே தமது ஞானவிளக்கத்துக்குத் துணைபுரிந்ததெனவும் கூறினுர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மூன்றாமாண்டிலே தேவாரத் திருமுறைகளைப்பாட இறைவன திருவருளே துணைபுரிந்தது. அமெரிக்காவில வாழ்ந்த ஐதரிஸ் என்ற சிறுவன் தனது ஐந்தாவது வயதில வியக்கத்தக்க கணித உண்மைகளை யுணர்தற்கும் அத்திருவருளே துணை புரிந்தது. கிறிஸ்துநாதர் கூறினுர்:— "Empty Thyself and I will Thee" நீ முதலில உன உள்ளத்தைக் காலியாக்கு; நான உள்ளத்தில உறைவன" உண்மையுணர்தலுக்கு உலகவிவகாரங்கள தடையாயுள்ளன. அவற்றை விலக்கி உள்ளத்தைத் தூய்மையாய் வைத்திருக்க இறைவன் உள்ளத்தில உறைவன",

யாழ்ப்பாணம், இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் செல்வி எ. சகுந்தலா, செல்வி வே. தமிழரசி, யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள செல்வன ஏ. கி. சிவபாலன, செல்வன ந. விக்கினேஸ்வரன் ஆகியவர்கள கூட்ட ஆரம்பத்தில் பொருட்செறிவுடன சிறந்த தமிழ்நடையில வள்ளுவரைப பற்றி உரையாற்றினார்கள. அவர்களுடைய பேச்சுக்கள யாவரையும இன்புறச் செய்தன. சமயப் பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் நன்றி கூறினர்.

## சைவசித்தாந்த விளக்கம்

நல்லை, திருஞானசம்பந்தராதீனத்தில் சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை பரப்பும் நோக்கமாக விரிவுரைகளும், சித்தாந்த வகுப்புகளும் ஷெ ஆதீன கர்த்தர் அவர்களுடைய பார்வையின் கீழ் நடைபெறுகின்றன கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பிரபல சைவ சித்தாந்த அறிஞர்களிடம் முன்னரே பாடங் கேட்ட பெரியார்களும் இவ்வியக்கத்தில் சேர்ந்துள்ளனர். எண்பது வயதுக்கு மேற்பட்ட அறநெறிக் காவலர் முதலியார் சே முத்துத்தம்பி அவர்களும் இவர்களுள் ஒருவர். இவ்வியக்கத்தின் பிரசாரகராக வித்துவான் க கணபதிப்பிள்ளை B. A. அவர்கள் கடமைபுரிகின்றனர். "சைவ சித்தாந்த அறிவினால் ஞானசம்பந்தம் உண்டாக வேண்டும். சைவ சித்தாந்த தோத்திரம் பரவ வேண்டும். மெய்கண்ட சந்தானத்தின் பெருமையை மக்கள் உணர வேண்டும்" எனக் கடமை புரிகின்ற ஆதீன வித்துவான் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்களுடைய பணி பாராட்டிற்குரியது.

## அணிந்துரை அரங்கம்

## KANDA PURANA

— (ஆங்கில வெளியீடு) —

ஆக்கியோன்:
சைவப்புலவர்
வ சுப்பிரமணியம்
தும்பளை, பருத்தித்துறை

இலகுவான நடையில் 18 பக்கங்கள் கொண்டுள்ளது. புராணங்கள் உணர்த்தும் உண்மைகள், தக்கன் தவஞ்செய்து உமையம்மையாரை மகவாகப் பெறுதல், சிவபெருமான் தாட்சாயணியாரை திருமணஞ் செய்தல், தக்கன் சிவனை அவமதித்து யாகஞ் செய்தல், வீரபத்திரக் கடவுளால் தண்டிக்கப் படுதல், சூரபன்மன் தோற்றம், தேவர்கள் சிறை, முருகப்பெருமான் அவதாரம், சூரசங்காரம், தெய்வயானையம்மன் திருமணம், வள்ளியம்மையார் திருமணம் இவற்றின் தத்துவங்கள் நூலில் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கில அறிவுடையவர்கள் இதனைப் பெற்று முருகப்பெருமானுடைய அருளைப் பெறுவார்கள். நூலாசிரியர் தமிழ் மொழி, வடமொழி, ஆங்கில அறிவுடையவர். நித்தியானுட்டானங்களுடன் சமய வாழ்வு நடத்துபவர். இந் நூலைப் புலோலி மகாவித்தியாலயத் தாபகர் திரு. V வேலாயுதபிள்ளை அவர்களுக்கு சமர்ப்பணஞ் செய்துள்ளார். ஷெ வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு T. இராமநாதன் B. A. அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளார். விரும்புவோர் பிரதிகளை நூலாசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## திருமந்திர மகாநாடு

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

நாள் மாலை ஸ்ரீ ல. ஸ்ரீ. குருமகா சந்நிதானம் அவர்கள முன்பாக 9 ஆம் திகதி "திருமந்திர மகாநாடு ஆரம்பமாகி 5 தினங்கள் தினசரி மாலையில் மகாநாடு நடைபெற்றது.

க. தீ

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை

நடாத்தும்

### பாடசாலை மாணவர்களுக்கான

# சமயபாடப் பரீட்சைகளும்

## விபரங்களும்

இப் பரீட்சைகள் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் முற்பகுதியில் நடைபெறும். விண்ணப்பங்கள் ஆவணி மாதம் 31ஆம் திகதிக்குள் அனுப்பப்பட வேண்டும். 3ஆம் வகுப்பு மாணவர் தொடக்கம் க. பொ. த வகுப்பு மாணவர் வரையுள்ள மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவுகளாக இப்பரீட்சை நடத்தப்படும்.

**பாலர் பிரிவு: 3ம் வகுப்பு.**

பாடத் திட்டம்:- அரசாங்கப் பாடசாலைகளின் 3 ஆம் வகுப்புக்குரிய சமயபாடத் திட்டப்படியும்; நாவலர் இயற்றிய முதலாம் சைவ வினாவிடை, 1—3 இயல்கள்: (1. கடவுளியல், 2. புண்ணிய பாவ இயல், 3. விபூதி இயல்) ஆகிய பகுதிகளும்

**ஆரம்ப பிரிவு I 4ஆம் வகுப்பு:**

பாடத் திட்டம்: அரசாங்க பாடசாலைகளின் 4ம் வகுப்புக்குரிய சமய பாடத் திட்டப்படியும், நாவலர் இயற்றிய முதலாம் சைவ வினாவிடை 3ஆம இயல விபூதி இயல், 6ஆம இயல சிவாலய தரிசன இயல பகுதியும்.

**ஆரம்ப பிரிவு II 5ஆம வகுப்பு:**

பாடத் திட்டம்: அரசாங்கப் பாடசாலைகளின் 5ம் வகுப்புக்குரிய சமயபாடத் திட்டப்படியும்; நாவலர் இயற்றிய 1ம சைவ வினாவிடை 7வது இயல் வேதாகம இயல் மட்டும் உள்ள பகுதியும்.

**கீழ்ப் பிரிவு I 6ஆம் வகுப்பு:**

பாடத் திட்டம்: அரசாங்க பாடசாலைகளின் ஆறும் வகுப்புக்குரிய சைவசமய பாடத் திட்டப்படியும், நாவலர் இயற்றிய 4 ஆம பாலபாடம் ஆரோக்கியம், கல்வி, செல்வம், செய்ந்நன்றியறிதல், பெரியாரைப் பேணுதல ஆகிய தலையங்கப் பகுதிகளும்.

**கீழ்ப் பிரிவு II 7ஆம் வகுப்பு**

பாடத் திட்டம்: அரசாங்க பாடசாலைகளின் ஏழாம் வகுப்புக்குரிய சைவசமயபாடத் திட்டப்படியும், நாவலர் இயற்றிய 4ஆம் பாலபாடம தருமம, தேவாலயம், தேவாலய தரிசனம, புராண படனம, தமிழ், தமிழ்ப் புலமை ஆகிய தலையங்கங்களையுடைய பகுதிகளும,

**மத்திய பிரிவு: 8ஆம் வகுப்பு**

பாடத் திட்டம்: அரசாங்க பாடசாலைகளின் 8ஆம் வகுப்பு சைவசமய பாடத்திட்டப்படியும். நாவலர் இயற்றிய இரண்டாம சைவவினாவிடை 4. வேதாகம இயல், 12. சிவாலய தரிசன இயல், 15. விரத இயல, 16. அனாதியியல் முடிவுள்ள பகுதிகளும.

**மேற் பிரிவு: I 9ஆம் வகுப்பு**

பாடத் திட்டம்: அரசாங்கப் பாடசாலைகளின் 9ஆம் வகுப்புக்குரிய சைவசமயப் பாடத்திட்டப்படியும்; நாவலர் சமயப பணி (சி. சீவரத்தினம) என்ற நாவலர் வரலாறும.

**மேற் பிரிவு: II 10ஆம வகுப்பு:**

பாடத் திட்டம்: அரசாங்கப் பாடசாலையின் 10 ஆம் வகுப்புக்குரிய (க பொ. த. வகுப்பு) சைவசமய பாடத்திட்டமும் ஆறுமுகநாவலர் சரித்திரம (த. கைலாசபிள்ளை) முழுவதும் உள்ள பகுதியும.

இப்பரீட்சைக்குத் தோற்றி; திறமையான சித்தி பெறுபவர்களுக்குப் பரிசில்களும வழங்கப்படும. பரிசில் பற்றிய விபரங்கள் விரைவில் வெளியிடப்படும. இப் பரீட்சைக்குத் தோற்றுவோர் விண்ணப்பப் படிவங்களை; யாழ்ப்பாணம, சைவ பரிபாலன சபை பரீட்சைக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம.

பிரவேசக் கட்டணம்: பாலர் பிரிவு 25 சதம்

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப பிரிவு | 50 சதம் | மத்திய பிரிவு | 75 சதம் |
| கீழ்ப் பிரிவு | 75 சதம் | மேற் பிரிவு | 1-00 ரூபா |

பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒவ்வொருவருக்குமுரிய பிரவேசக் கட்டணத்தை மணியோடர் மூலம அல்லது காசோலை மூலம் விண்ணப்பத்துடன் அனுப்புதல வேண்டும். நாவலர் நெறியில் நடைபெறும் சைவசமயப் பாடப் பரீட்சைகளுக்கு மாணவர்களை பங்குபற்றச் செய்து ஊக்கம் கொடுக்குமாறு பாடசாலை அதிபர்களையும, தலைமையாசிரியர்களையும மற்றும ஆசிரியர்களையும கேட்டுக் கொள்ளுகின்றோம.

அரசாங்க பாடத்திட்டப்படி கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரம்பெற்ற சைவசமயபாட நூல்களை உபயோகிக்கலாம.

சைவபரிபாலன சபை, சி. சீவரத்தினம்,
யாழ்ப்பாணம், 1-2-72. பரீட்சைக் காரியதரிசி.

---

# பாண்டியனுடைய வெப்பு நோயைத் தீர்த்தல்

சைவப்புலவர் திரு. க சிற்றம்பலம், கோட்டடி

(முன் வளர்ச்சி — 3)

இச் செயல் இப்படியாக இருக்க மன்னன் ஆணைப்படி மடத்திற்குத் தீவைக்கச் சமணர்கள் தங்கள் மந்திரவலியைப் பயன்படுத்தினார்கள். கரத்தில் அனலேந்திய அண்ணலின் அடியாருக்குத் தீயினால துன்பம் நிகழுமா! ஆகவே அவர்கள் சாமர்த்தியம் பலிக்கவில்லை. திகைத்தார்கள் தம் மந்திர வலி மங்கியதைக் கண்ட சமணவாதிகள் மன்னனறிந்தால் தங்கள் மதிப்பு கப்பலேறி விடுமே என்று எண்ணி அத்திரு மடத்திற்கு தீயினையிட்டார்கள். அதனைக் கண்ட அடியார்கள், ஞான வள்ளல் ஞான சம்பந்தரிடம் முறை யிட்டார்கள். பெருமான் உள்ளம் வருந்தி சிவனடியாருக்குத் தீங்கு நினைப்பவர்களை தீயினால் தீர்க்க வெண்ணி, இச்செயலுக்குக் காரணம நீதியில்லா நிலையே காரணம். இதற்கு உடந்தையாக உள்ளவன் அரசனே எனக் கொண்டு,

"வெய்யதீங் கிதுவேந்தன்
மேற்றெனும்விதி முறையால்
செய்யனே திருவாலவாயெனுந்
திருப்பதிகஞ்
சைவர்வாழ் மடத்தமர்களிட்ட
தீத்தழல்போய்ப்
பையவே சென்று பாண்டியற்
காமென பணித்தார்"

மன்னன் மேனியில் வெப்புநோயணுகியது. காலைக் கதிரவன் தன் கதிர் பரப்புவான் கீழ்த் திசையில் பவனி வந்தான். அரசன் வெப்பு நோயால் அல்லலுறும் செயலைக் கண்ட சிவனடியாராகிய மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் அமணர்கள் அரனடியார் மடத்துக்கு இட்ட தீயின் பயனிதுவே என அனுமானஞ்செய்தார்கள். ஆனால் சமண குருமார் அரசன் வெப்பு நோயைத் தீர்க்க முயன்றார்கள். மந்திரமோதி மயிற்பீலியால் தடவினார்கள். சமணரும் தங்கள் சமய வித்தைகளையெல்லாம் செய்து பார்த்தார்கள். நோய் தணிந்தபாடில்லை. அதன் வேகம் மேலும் மேலும் கூடிக்கொண்டே போனது. அழலிடை பட்டபுழுப்போல அரசன் துடித்தான். அரற்றினான். அமணர்கள் அஞ்சினர், நடுங்கினர், திகைத்தனர். மந்திர நீரை அரசன மேல் தெளித்தனர். மந்திரிக்கப்பட்ட "நீர் வெப்பத்தைக் கூட்டியது. நீங்கள் என்னைவிட்டு அகலுங்கள். உங்களால் என் நோயை தீர்க்க முடியவில்லை. என்று கூறி அறிவு சோர்ந்தான் அரசன். இவற்றையெல்லாம் அவதானித்த அமைச்சர் குலச்சிறையார் சிந்தையில் சமணர்களின் தீங்கு நிழலாடத் தொடங்கியது. சிவனடியாருக்குச் செய்த தீங்கு எனத்தெளிந்தார். இதற்கு மருந்து ஞானவள்ளலார் ஞானசம்பந்தரின் கருணையென உணர்ந்தார். அவர் அருள் நோக்கம் பெற்றால் இம்வெம்மைப் பிணியுமன்றி, பிறவிப்பிணியும் நீங்கும எனக்கண்டா ஞானசம்பந்தரை அழைப்போமா என மங்கையர்க்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

---

மயிலிட்டி, ஸ்ரீ வரசித்தி விநாயகராலயத்தில்

# மகாசிவராத்திரி விழா

மயிட்லிடி ஸ்ரீ வரசித்தி விநாயகராலயத்தில் இம் மாதம் 13ம் திகதியன்று அவ்வூர் இந்து அறநெறிக் கழகத்தினர் மகாசிவராத்திரி விரதத்தை அநுட்டிக்கப் போகின்றார்கள். நான்கு சாமப் பூசை ஆராதனைகள் நிகழும். முதலாம் சாமம பூசையையடுத்து, திரு சி. கதிரவேற்பிள்ளை (கோப்பாய் பா. உ.) தலைமையில் பண்டிதை தங்கமமா அப்பாக்குட்டி சொற்பொழிவாற்றுவார். இரண்டாம சாமப்பூசையையடுத்து, டாக்டர் க. சிவஞானரத்தினம் தலைமையில் செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோருடைய சொற்பொழிவு, மூன்றும சாமப் பூசையை அடுத்து திரு. மு. வைரவப்பிள்ளை தலைமையில் இசை நிகழ்ச்சிகள், நான்காம சாமப் பூசையை அடுத்து சிவஸ்ரீ கு பாலசுந்தரக் குருக்கள் தலைமையில் பண்டிதர் மா. குமாரசாமி, திரு த சிவலிங்கம, திரு. நம. சிவப்பிரகாசம் ஆகியோரின் சொற்பொழிவுகள் நிகழும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திரிக் கோட்டில்
வழ: இல M B 5399

மல்லாகம் 1. சிவப்பிரகாசம குகதாசனும்
2. பெண் மகேஸ்வரியும —வழக்காளிகள்

எதிராக

கொக்குவில். 1. கந்தர் பொன்னம்பலம் (காலஞ்சென்றவர்)
தற்போது 2. N. தம்பையா இராசையாவும்
5, பண்டுலா வீதி, 3. பெண் பாக்கியமும
மாத்தறை. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5399-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம ஞு சித்திரைமீ 7-ந் (7-4-72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5805/-ம், 11-9-63 தொடக்கம் 28-1-70 வரைக்கும் ரூபா 3500/-க்கு 10 வீத வட்டியும அதன் பின் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் முழுத்தீர்வைத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 511-35 சதமும் இவற்றில ரூபாய் 1500/- கழிக்கப்பட வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை 'மாத்தனை நினைத்தது முடித்தானும்" கி. பர. 1 குளி 3¾ ஷ கி பர. 8 குளி 12¾ம் இரண்டும சேர்ந்து D 201/114.ல் மாத்தனையும் நினைத்தது முடித்தானு" (Maththanai and Ninaiththathu Mudiththaan) கி ப 7 குளி 16½ யாகப் பதிவு செய்யப் பட்டது இணறும் பயிர்களும் குடிசைகளும எல்லை கிழக்கு எதிரியின் ஆதனமும் கையொழுங்கையும் விஜயரத்தினம் இராசதுரையினதனமும வடக்கு விஜயரத்தினம் இராசதுரையினதனமும் பிரசித்த ஒழுங்கையும் மேற்கு வெள்ள வாய்க்கால் தெற்கு தாமோதரம் பிள்ளை பெண் மாணிக்கத்துக்கும், முத்துக்குமாரு பெண் கண்மணிக்கும் இராசையா பெண் அன்னலெட்சுமிக்குமுரிய ஆதனம இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும் அடியுடமைகளும D 245/42-ல பதியப் பட்டது.

மல்லாகம். செ. பாண்டித்துரை
1-12--71 கொமிஷனரும், விலைமதிப்பாளரும,
Commissineor of Sales & Values
எம. 406 3—3—72

---

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் காரைநகர் வலந்தலை வடக்கில் அடைவு பிடிக்கும் திரு. வே. சுப்பிரமணியம அவர்களின் அடைவு கடையில் 1971 ம் ஞு தைமீ முதலாம் திகதிக்கு முன் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1972 ம ஞு பங்குனி மாதம் 25ம் திகதி சனிக்கிழமை முறபகல பத்துமணி தொடக்கம ஷை அடைவு கடையில வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர், 1972-ம் ஞு மாசிமீ 23-ம்திகதி ஏலவிற்பனையாளர்

---

ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளினது சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப் பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்.

---

## திருமந்திர மகாநாடு

திருக்கயிலாய பரமபரைத் திருவாவடுதுறை ஆதீனம் 22 ஆவது பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ. ல. ஸ்ரீ. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஆதீனத்தின் பிரதம பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை விழாவை சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

ஸ்ரீ. ல. ஸ்ரீ. குருமகா சந்நிதானம் அவர்கள் தைத்திங்கள் 2ஆம் நாள் காலை ஸ்ரீ. ல. ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளுக்கு சிறப்பாக அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து கொடிமரத்தில் அன்னக் கொடியைஉயர்த்திவைத்தார்கள்

ஆதீனத்தின் பரம்பரையின் ஞானபிதாவான ஸ்ரீ மெய்கண்ட தேவர் நினைவாக ரூபாய் 1 லட்சம் செலவுக்குமேல புதிதாகக் கட்டப்பட்டுள்ள "மெய்கண்டார் விலாசத்தில்" தைத்திங்கள் 2ஆம்

வளர்ச்சி 2-ம் பக்கம்

## பாண்டியனுடைய வெப்பு நோயைத்

(3-ம் பக்கத்தின் வளர்ச்சி)

கரசியாரை வினவினர். ஞானசம்பந்தர் என்ற பெயர் கேட்டதும் மெய்யுணர்வு கொண்டு தென்புகண்டவர் போல அரசன் அப்படியாயின் உடனே "அவரை அழைத்து வாருங்கள்" என்றான். தன்பத்தாவின் பரிதாப நிலையையும், அவர் நோயினால் படும் துன்பத்தையும் கண்ணுற்ற தேவியார் அமைச்சரின் துணையுடன் ஞானசம்பந்தரின் திருமடத்திற்கேகினர். அங்கு தெய்வீகச் சோதியாகத் திகழும் திருஞானசம்பந்தரைக் கண்டனர். இருவரும் அவரின் பாதாரவிந்தத்தைப் பணிந்தனர். அமணரின் வஞ்சனையால் மன்னனிடம் வெப்பு நோயுண்டாகிய செய்தி எடுத்துக் கூறினர். அமணர்கள் செய்யும் பரிகாரம் அரசனுக்கு வேதனையாக இருப்பதை இயம்பினர். ஆகவே மன்னனையும் மக்களையும் காத்து மறத்தொழில்புரியும் அமணர்களை வென்று, மேன்மைகொள் சைவநீதி விளங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சினர். இறைவன் திருவுளத்தை உணர்ந்தார் புகலி வேந்தர் 'ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" செம்மை நெறியறியாத சமணர்களை வாதில் வென்று மீன் கொடியுடைய வேந்தன் நோயை திருநீற்றினால் மாற்றி நாட்டில் சிவமணம் கமழச் செய்வேன் என்று உறுதியுரை பகர்ந்தார்.

ஐந்தெழுத்தின் அருமையையுணர்ந்த அமைச்சரும், மங்கையர்க்கரசியாரும் கூப்பிய கரத்தாய் ஆலவாய்த் திருக்கோயிலை அடைந்தனர்.

ஞானசம்பந்தர் ஆலவாய்ப்பெருமானது திருக்கோயிலையடைந்தனர் ஞானசம்பந்தர் ஆலவாய்ப்பெருமானது ஆணையைப்பெறுவான பொருட்டு,

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதிமாதுடனாய பரமனே."

என்று விடை பெற்றுச் சென்றனர் தொண்டர்கள் புடைசூழ, சங்குகள் முழங்க, மங்கல வாத்தியங்கள் இயம்ப, பஞ்சாட்சரம் செபத்துடன் முத்துச் சிவிகையில் எழுந்தருளிச் சென்றார். ஞானவள்ளலின் வரவை மந்திரியார் உரைக்கக் கேட்ட மன்னன் தென்பு பெற்றவன்போல திகைப்பு நீங்கி, அமருவதற்கு, ஆசனம் அமைக்குமாறு கட்டளையிட்டான். பாலகன் அமர கோலம் செய்யப்பட்ட பீடம் அமைக்கப்பட்டது. மாளிகை வந்த பாலனும், தன் முத்துச்சிவிகையிலிருந்து இறங்கி, மன்னன் இருந்த இடம் சென்றார், மன்னன் பாலனாக வந்த, ஞானப் பால் உண்ட ஞானவள்ளலைக் கண்டதும். உள்ளத்தில் புத்துணர்ச்சி கொண்டவனாய்; அடக்கமுடியா ஆனந்தம் கொண்டான். கை கூப்பி வணங்கி. அருகிருந்த பீடத்தில் அமருமாறு செய்தான். அருகிருந்த அமணர் குழாம் ஆரவாரத்துடன், அறிவை மறைக்கச் சூழ்ந்த அஞ்ஞானத்தைப்போல சிவபுரச் செம்மலைச் சூழ்ந்தார்கள். இவற்றையெல்லாம் அருள்பெருக்கும் மங்கையர்க்கரசியாரின் மனத்தில பச்சிளம் பாலனின் தோற்றமும், சமணர் கூட்டத்தில புலிக் கூட்டத்தில் நடுவே அகப்பட்ட பசுக்கன்றுபோல காட்சியளித்தது: கெ... இல அமணர்களால் பாலனுக்கு ஏதும் தீங்கு வருமோ, எனத் திகைத்த சிந்தையராக விளங்கினர்.

இவற்றையெல்லாம் ஞான வள்ளல் ஞானசம்பந்தர் தன் ஞானத்தால் உணர்ந்து மங்கையின் மனக் கலக்கத்தை நீக்குவான் எண்ணி,

"மானினேர்விழி மாதராய்
வழுதிக்குமா பெருந்தேவி கேள்
பானல்வாயொரு பாலனீங்
குவனென்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலையாதியாய இடங்
களிற் பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளியேனலேன்
திருவாலவாய் அரன் நிற்கவே"

என்னுந் திருப்பதிக மூலம் அறிவுறுத்தி கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் தத்துவம் அமைந்த பாசுரங்களைப் பொழிந்தார்.

உள்ளத்தில் உவகை கொண்ட மங்கையர்க்கரசியார் இனி நடப்பதை அவதானிப்போம் எனச் சிந்தையைச் சிவன்பால் செலுத்தி வேண்டுதல் செய்தார். அப்பொழுது. அரசன் அங்கு சூழ்ந்து நின்ற அமணர் கூட்டத்தையும், சிவஞானக் குழந்தையையும் விளித்து! இங்கு எனை வாட்டி, வருத்தி, அளவிடைப் புழுவாக்கும் இந்த வெப்புநோயைத் தீர்க்க வல்லவரே, வாதில் வென்றவராகும் எனப் பகர்ந்தான இடப் பாகத்தில் அமர்ந்திருந்த சமணர் கூட்டம் தங்கள் பகுதியிலுள்ள வெப்புநோயை நீக்க முயன்றனர் இலதிக் கண்ட ஆளுடைய பிள்ளையும மன்னனின் வலப்பக்கநோயை மாற்ற ஒப்புக் கொண்டனர். அமணர்களின மந்திர உச்சாடணமும, மயிலபீலிகளும, மந்திர நீரும் இடதுபாக நோயைத் தீர்க்க முயன்று, நோயின கொடுமை மேலும மேலும வெந்த புண்ணில வேல நுழைந்தாற் போல வேதனை செய்தது. அரசன் துடித்தான் வலது பக்கத்தில் அமர்ந்திருந்த அருள் வள்ளல், தனது செந்தாமரை ஒத்த திருக்கரத்தால், திருநீற்றை எடுத்து,

"மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்
படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி
லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவாலவாயான் திருநீறே.'

எனத் தொடங்கி, திருநீற்றுப் பதிகத்தை ஓதி திருநீறு சாத்தியதும, மன்னன், நோய் பகலவனைக் கண்ட பனிபோல சாந்தி பெற்றது. நீற்றறையில் திருநாவுக்கரசருக்கு, வெப்பம்

மாசில் வீணையும் மாலை மதி
யமும் வீசுதென்றலும
வீங்கிளவேனிலும், மூசுவண்
டறை பொய்கையும்

போல, ஞானசம்பந்தரின், திருநீற்றுப் பதிகம் இம்மை நோய்க்கும். மறுமை நோய்க்கும் மருந்தாக அமைந்தது. மன்னன், சமணர்களை அவ்விடத்தைவிட்டு அகலுமாறு ஆணையிட்டு, அருள் வள்ளலைக் கொண்டு முழுப் பிணியையும தவிர்ப்பதற்குக் கருதினர். மன்னன நோய் நீங்கியது, மருட்சியும் அகன்றது ஞானசம்பந்தரின் பாதாரவிந்தத்தை, விழுந்து வணங்கினன. மன்னனின் உடல் நோயும், பழவினையும் நீங்கின. மங்கையர்க்கரசியாரும் பெருமகிழ்ச்சி கொண்டு இன்று நாம உய்ந்தோம், மன்னனும உய்ந்தான் என்று அருள் வள்ளல் ஞானசம்பந்தரின் பாதாரவிந்தங்களைப் பணிந்தெழுந்தனர். ஆனால் சமணர்கள் சம்பந்தரை தங்கள் பொய்மையை மெய்யாக்க சமய வாதம் செய்ய அழைத்தார்கள். ஆலவாயானின் அருள் பெற்ற அந்தணர் இதற்கு அஞ்சுவாரோ? வாதுக்குப் புறப்பட்டார். தங்கள் உயிர்களை பணயம் வைத்தே வாது தொடங்கியது. நீரும், நெருப்பும நிற்கும் நிமலன் அவர்களின் போலி வாதத்தை புலப்படுத்தி, வாதில் வெற்றி வாகை சூடச் செய்தார். சமணர்கள் தாம கூறியபடி கழுவிலேறினர். மன்னன் மனக்கூனும் உடல்கூனும நீங்கி, இம்மைக்கும, மறுமைக்கும மாமருந்தாக அமைந்த ஞான வள்ளலை வாயார வாழ்த்தினான். திருநீற்றின் ஒளிவிளங்கவும், சைவநெறி தழைத்தோங்கவும் காரணமாகவமைந்த மங்கையர்க்கரசியை தெய்வத்தமிழ் திருமுறையாகிய தேவாரத்தில் இடம் பெறச் செய்தார். பாண்டி நாட்டில் சைவம தழைக்கவும், திருநீற்றின் ஒளிவிளங்கவும் தெய்வப் பாவையாக மங்காத ஒளிபெற்று இன்றும் தெய்வீக ஒளிவிளங்க வாழ்ந்து கொண்டிருப்பதாக, அவரின் தொண்டு சிறந்தோங்க செய்வான் போல,

"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமாதேவி
பணி செய் பாரிடை நிலவும்
சந்தமார் தரளம், பாம்புநீர் மத்தம்
தண் எருக்கம் மலர் வன்னி
அந்திவான்மதி சேர் சடைமுடியண்ணல்
ஆலவாய் ஆவதும இதுவே.

என ஞானவள்ளல் புகழ்ந்து பாடினர். திருநீற்றின் ஒளிவிளங்க, ஒவ்வொரு பெண்ணும் மங்கையர்க்கரசியாக வாழ்ந்தால் சைவம் வளரும்.

---

### சமயதீட்சை

புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில் மண்டபத்தில் காணவாயா தினம் சிவஸ்ரீ செந்திநாதர் விஸ்வநாதக் குருக்கள், மார்ச்சீ 10-ம உ. சைவ அடியார்களுக்கு சமய தீட்சை செய்துவைப்பார்

—:—

---


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. M. B. 11062

காரைதீவு கிழக்கு, இராமுப்பிள்ளை ஆறுமுகம் கைம்பெண் தெய்வானை. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு தத்துவ வழக்கு இல: 2042ல் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை ஆறுமுகத்தின் ஆதனங்களின் தத்துவகாரி —வழக்காளி

எதிராக

காரைதீவு கிழக்கு, 1. கந்தர் வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளையும் 2. வேலுப்பிள்ளை நடராசாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11062-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு பங்குனி மீ 20-ஆம் திகதி (29-3-72), புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6977-75ம், 23-8-69 தொடக்கம் 4-3-70 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 391-80 இதில் ரூபா 200/- கோட்டுச் செலவாலும், ரூபாய் 2000/- ஈட்டுவலகையாலும் கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை "ஆண்டிச்சி தோட்டம்" கிலப்பரப்பு 4ம் குழி 5. 3/5ம். வீடும், கிணறு, தென்னைகளும். மற்றும் இதைச் சேர்ந்தவைகளும், இதற்கெல்லை கிழக்கு: சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு: தில்லையம்பலம் கைம்பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஆறுமுகம் கந்தருக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் 5/8 பங்கும் இதைச் சேர்ந்தவைகளும். எதிராளிக்குரியவைகள். பதிவிலக்கம் D: 162/27.

46, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம
இ. சு. தர்மரத்தினம்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
404-3-3-71

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

மயில்வாகனம் சின்னத்தம்பி கைம்பெண் பரமேஸ்வரி சுன்னாகம் — வழக்காளி

இல. M. B. 10806 எதிராக

1. பெரியர் ஐயாத்துரை
2. மனைவி பொன்னம்மா இருவரும், சுன்னாகம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 10806-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளையும் 1972-ம் ஆண்டு பங்குனி மாதம் 29-ம் திகதி (29-3-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 53[illegible]5/-ம் 15-6-69 தொடக்கம் 27-10-69 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 372-71. ரூபாய் [illegible]500/- கழிக்கவும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகமிலுள்ள கொட்டலையன் சீமா அத்தயடி வடக்கு சதுருக்கை சீமா வடுவாவத்தைச் சந்தி சீமா கணுறடி பரப்பு கல. இலாச்சம் 3½யும் வீடும் செய்பயிர் வளவையிரும் உட இழுக்கேயிருக்கும் கிணற்றுப் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு சரவணை கைம்பெண் நாகமுத்துவுக்குரிய காணியும் கதிரேசு பெண் தையலுக்குரிய காணியும் வடக்கு சரவணை பெண் மாணிக்கத்தின் காணி மேற்கு கந்தையா கனரத்தினத்தின் காணி தெற்கு வேலுப்பிள்ளை பெண் பூரணத்துக்கும் மறுபேருக்குமுரிய காணி இதடங்கலில் சொரியலாய பரப்பு கல இலாச்சம் 2 மதற்கு சொந்தவைகளும்.

2. மேற்படி இறை தேமாவடவை பரப்பும் கெல் இலாச்சம் 8 குழி 84/5-ம் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு சின்னப்பு பெண் சின்னக்குட்டிக்கும் தம்பிப்பிள்ளை பெண் செல்லாச்சிக்குமுரிய காணிகள் மேற்கு கடைவரம்பு வடக்கும் தெற்கும் ஆசைப்பிள்ளை நடராசாவின் காணி இவ்வெல்லைப்படி ஆதடங்கலிற் சொரியலாய் அரைவாசியுமதற்கு சேர்ந்தவைகளும்,

3. மேற்படி இறை மணவாயன் வயல் பரப்பு கெல் இலாச்சம் 121/ யும் கிழக்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு நாகலிங்கம் கைம்பெண் ஆச்சிமுத்துவின் காணி வடக்கு ஐயம்பிள்ளை கந்தையாவின் காணி மேற்கு வயிரமுத்து பெண் அன்னம்மாவின் காணி தெற்கு சிதம்பரி மகள் நாகதலைக்கும் கந்தையா பெண் தங்கமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய காணிகள் இவ்வெல்லைப்படி இடங்களும்.

"வேல பதி"
புத்தூர்.
[illegible]-2-72
S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும விலைமதிப்பாளரும்,
எம். 405 3-3-72


---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் கம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில வசிக்கும திரு. மு. மயிலவாகனம் அவர்களால 3-3-1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்